The Hindu (English)

Dated: 29.04.2025

# Indians fear fake news but are less concerned about press freedom

In India, the share of people who believe that media freedom exists is higher than the share of people who believe it is important

**DATA POINT**

Sambavi Parthasarathy
Vignesh Radhakrishnan

In India, while there is widespread anxiety about misinformation and fake news, people largely do not attribute it to government influence. Instead, a relatively large share do not mind greater state censorship, according to the latest survey by the Pew Research Center.

Survey data suggests that while distrust in fake news is high, confidence in systemic solutions such as a free press remains low. In fact, a relatively large share of respondents believes that the media is free from state censorship and supports greater state control over the press. In other words, the data indicates that many citizens view misinformation as stemming from sources such as social media, WhatsApp, or other non-governmental actors, rather than from state censorship or suppression.

In India, 65% of the respondents said that made-up news and information is a very big problem in the country. This is one of the highest rates among the 35 countries surveyed and places India among the top 10 nations where this concern is most strongly felt.

At the same time, only 68% of the respondents said that it is very or somewhat important for the media to report news without state or government censorship – the second-lowest rate among the 35 countries surveyed. In fact, 80% of the respondents believe that the media in India is currently somewhat free or completely free from state intervention. This is one of the highest rates among the countries surveyed and places India among the top 10 once again.

This dichotomy has serious implications for press freedom in India, which has been deteriorating rapidly. In 2024, India ranked 159 out of 180 countries in the World Press Freedom Index published by Reporters Without Borders. While India has consistently ranked below 100 since 2003, the situation has worsened significantly in recent years.

**Chart 1** shows the share of respondents who said that made-up news and information is a very big problem in their country. In Bangladesh, South Korea, Chile, Colombia and Thailand, over 70% of the respondents felt this. In Peru, Philippines, Turkey, Greece and India, more than 65% or more of the respondents said so. The concern for fake news was lowest in Singapore, Poland, Sweden, Netherlands, and Israel.

**Chart 2** shows the share of respondents who said that it is very or somewhat important for the media to report news without state or government censorship. The share was above 90% in Greece, Sweden, the U.K., and 11 other countries; between 80% and 90% in 13 countries; and between 70% and 80% in five countries. In India and Kenya, less than 70% of the respondents emphasised the need for a media free of state censorship.

**Chart 3** shows the share of respondents who said that the media is currently completely/somewhat free in their country. India, Sweden, Netherlands, Philippines, Ghana, Australia, Kenya, and Thailand are the eight countries where 80% or more of the respondents said that the media is now completely or somewhat free. In Chile and Greece, less than 40% felt so.

Reading Charts 2 and 3 together offers a different perspective. India and Kenya are the only two countries where a larger share of respondents believe that the media is free (80% or more), while a smaller share (less than 70%) emphasise the importance of media freedom. In other words, in 33 of the 35 nations surveyed, there is a 'press freedom gap', which means the share of people who feel media freedom is important is greater than the share who believe it exists. In contrast, in India and Kenya, this gap is reversed.

## Dangerous dichotomy

The data for the charts were taken from Pew Research Center's 'Free Expression Seen as Important Globally, but Not Everyone Thinks Their Country Has Press, Speech and Internet Freedoms' released in April 2025





**Chart 1:** % who say made-up news and information is a very big problem in their country




**Chart 2:** % who say it is very/somewhat important for the media to report without state censorship




**Chart 3:** % who say the media is completely/somewhat free in their country currently



Deccan Chronicle

Dated: 29.04.2025

# 2 Pak nationals held over bid to secure voter IDs

DC CORRESPONDENT
RAIPUR, APRIL 28

Two Pakistani nationals were arrested in Raigarh district in Chhattisgarh for securing voter ID cards by producing fake documents, police said on Monday.

Iftikar Sheikh (29) and Arnish Sheikh (25) were late on Sunday arrested in the village of Kodatarai, police said.

The two accused, originally hailing from Karachi in Pakistan, held valid Pakistani passports and the Long Term Visas (LTV) and were staying in the house of one Yakub Sheikh in Kodatarai village, the police said.

The New Indian Express

Dated: 29.04.2025

# Two Pak nationals arrested for illegally obtaining Indian IDs

The police in Chhattisgarh's Raigarh have arrested two Pakistani nationals who allegedly acquired Indian voter identity cards through fraudulent means. The Pakistani nationals, Iftekhar Sheikh (29) and Armish Sheikh (25), are siblings. Their parents had died during the Covid pandemic. The duo had been staying in the Kodatarai area of Raigarh, 230 km east of Raipur. Their arrest comes amid a drive launched by the local police to ensure that there were no Pakistani nationals illegally staying there.

The Hindu (Tamil)

Dated: 29.04.2025

# சட்டவிரோதமாக வாக்காளர் அட்டை பெற்ற 2 பாகிஸ்தானியர்கள் சத்தீஸ்கரில் கைது

ரெய்கர்

சத்தீஸ்கர் மாநிலத்தில் சட்டவிரோதமாக தங்கியுள்ள பாகிஸ்தானியர்களை கண்டறியும் சோதனை முடுக்கி விடப்பட்டுள்ளது.

இதில் ரெய்கர் மாவட்டத்தில் உள்ள கோபாதாரை என்ற கிராமத்தில் சந்தேகப்படும்படி சிலர் தங்கியிருப்பதாக போலீஸாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன் அடிப்படையில் அந்த மாவட்டத்தில் போலீஸார் தீவிர சோதனை நடத்தினர். அப்போது, யாகூப் ஷேக் என்பவரின் வீட்டில் தங்கியிருந்த இப்திகர் ஷேக் (29) மற்றும் அர்னிஷ் ஷேக் (25) ஆகிய 2 பாகிஸ்தானியர்களை போலீஸார் பிடித்து விசாரித்தனர். அப்போது அவர்கள் போலி ஆவணங்களை கொடுத்து சட்டவிரோதமாக இந்திய வாக்காளர் அட்டை பெற்றிருப்பது தெரிய வந்தது. இதையடுத்து இருவரையும் போலீஸார் கைது செய்தனர். விசாரணையில் கைது செய்யப்பட்ட இருவரும் பாகிஸ்தானின் கராச்சியை சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

Daily Thanthi

Dated: 29.04.2025

### இரட்டை இலை சின்னம் விவகாரம்:

# டெல்லி தேர்தல் கமிஷன் அலுவலகத்தில் விசாரணை

## சி.வி.சண்முகம், ரவீந்திரநாத் உள்ளிட்டோர் ஆஜர்

புதுடெல்லி, ஏப்.29-

இரட்டை இலை சின்னம் விவகாரம் தொடர்பாக, டெல்லி தேர்தல் கமிஷனில் விசாரணை நடந்தது. இது தொடர்பாக கட்சியினர் ஆஜரானார்கள்.

### தேர்தல் கமிஷன் விசாரணை

அ.தி.மு.க. உட்கட்சி பூசல் முடிவுக்கு வரும்வரை இரட்டை இலை சின்னத்தை யாரும் பயன்படுத்த அனுமதிக்கக்கூடாது என வலியுறுத்தி சென்னை ஐகோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கில், இதுகுறித்து தேர்தல் கமிஷன் விசாரித்து முடிவு எடுக்க அறிவுறுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்திய தேர்தல் கமிஷன் விசாரணை நடத்தியது. ஆனால் இதற்கு எடப்பாடி பழனிசாமி தரப்பில் இடைக்கால தடை பெறப்பட்டது. பின்னர் அந்த தடை விலக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இரட்டை இலை விவகாரம் தொடர்பான விசாரணையை தேர்தல் கமிஷன் மீண்டும் தொடங்கியது.

இந்த விசாரணைக்கு ஏப்ரல் 28-ந்தேதி (அதாவது நேற்று) டெல்லியில் உள்ள இந்திய தேர்தல் கமிஷனில் ஆஜராகுமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு தேர்தல் கமிஷன் நோட்டீஸ் அனுப்பியது. இதன் அடிப்படையில் நேற்று மாலை விசாரணை நடைபெற்றது.

### சி.வி.சண்முகம் ஆஜர்

விசாரணைக்கு எடப்பாடி பழனிசாமி தரப்பில் சி.வி.சண்முகம் எம்.பி., ஓ.பன்னீர்செல்வம் சார்பில் வக்கீல் ராஜலட்சுமி மற்றும் பி.ரவீந்திரநாத், வக்கீல் புகழேந்தி, சூரியமூர்த்தி, ராம்குமார் ஆதித்தன், கே.சி.பழனிசாமி, காந்தி ஆகியோர் ஆஜர் ஆனார்கள்.

இவர்கள் தங்களது தரப்பு கருத்துகளை தேர்தல் கமிஷனில் தெரிவித்தனர். எடப்பாடி பழனிசாமி தரப்பைத் தவிர மற்ற அனைவரும் எடப்பாடி பழனிசாமியை அ.தி.மு.க. பொதுச்செயலாளராக அங்கீகரிக்கக்கூடாது என்றும், வழக்கு முடியும் வரை இரட்டை இலை சின்னத்தை பயன்படுத்த அனுமதிக்கக்கூடாது என்றும் வலியுறுத்தி உள்ளனர். பொதுச்செயலாளர் தேர்தலை முறையாக நடத்த வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டு உள்ளது. ஓ.பன்னீர்செல்வத்துக்கு ஆதரவாகவும் பேசப்பட்டு உள்ளது.

### அதிகாரம் இல்லை

ஆனால் அதேநேரத்தில் இவர்களுக்கு எதிராக எடப்பாடி பழனிசாமி தரப்பில் வாதிடப்பட்டது. இந்த விவகாரம் குறித்து விசாரிக்க தேர்தல் கமிஷனுக்கு அதிகாரம் இல்லை என்று எடப்பாடி பழனிசாமி தரப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இதுபற்றி விசாரணைக்கு பிறகு அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

இந்த விசாரணை மேலும் தொடரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

Dinakaran

Dated: 29.04.2025

## அதிமுக கட்சி, இரட்டை இலை சின்னத்தை கேட்க

# எடப்பாடி பழனிசாமிக்கு அதிகாரம் இல்லை

**தலைமை தேர்தல் ஆணைய விசாரணையில் மனுதாரர்கள் ஒட்டுமொத்தமாக வலியுறுத்தல்**

புதுடெல்லி, ஏப்.29: இரட்டை இலை மற்றும் பொதுச்செயலாளர் வழக்கு சம்பந்தமான தேர்தல் ஆணையம் விசாரிக்க விதிக்கப்பட்ட தடையை நீக்கக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் புகழேந்தி தொடர்ந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், இரட்டை இலை சின்னம் மற்றும் அதிமுக ஆகிய உட்கட்சி விவகாரம் தொடர்பாக தேர்தல் ஆணையம் விசாரிக்க தடையில்லை என்று உத்தரவிட்டிருந்தது.

மேலும் இரட்டை இலை சின்னம், அதிமுக கட்சி, பொதுச்செயலாளர் ஆகிய விவகாரம் குறித்து சூர்யமூர்த்தி, புகழேந்தி, கே.சி.பழனிசாமி, ஓ.பி. ரவீந்திரநாத், ஓ.பன்னீர் செல்வம், ராம்குமார் ஆதித்தன் ஆகியோர் தனித்தனியாக இந்திய தலைமை தேர்தல் ஆணையத்தில் தாக்கல் செய்துள்ள மனுக்கள் நிலுவையில் உள்ளது. இதையடுத்து இரட்டை இலை சின்னம் மற்றும் அதிமுக உட்கட்சி விவகாரம் ஆகியவை குறித்து தேர்தல் ஆணையத்தில் நேற்று விசாரணை நடந்தது.

எடப்பாடி பழனிசாமி தரப்பில் ஆஜரான சி.வி. சண்முகம் கூறுகையில், கட்சியில் இருந்து வெளியேறியவர்கள், நீக்கப்பட்டவர்கள் கொடுத்துள்ள மனுவை உடனடியாக தள்ளுபடி செய்ய வேண்டும். உள்கட்சி விவகாரம் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது தேர்தல் ஆணையம் தலையிட முடியாது என்று வலியுறுத்தப்பட்டது என்று கூறினார்.

இதையடுத்து மனுதாரர்களான கே.சி.பழனிசாமி, வழக்கறிஞர்கள் ராம்குமார் ஆதித்தன், சூர்யமூர்த்தி மற்றும் புகழேந்தி ஆகியோர் கூறுகையில், எடப்பாடி பழனிசாமி தொண்டர்களால், அடிப்படை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அனைத்து விதிகளையும் திருத்திதான் பொதுச்செயலாளராக ஆனார்.

எனவே அது அதிமுக அடிப்படை விதிகளுக்கு எதிரானது. மேலும் இரட்டை இலை சின்னம் விவகாரத்தில் அரசியல் காலநிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது.

ஒரு கட்சியில் பிளவு ஏற்பட்டால் சின்னத்தை யாருக்கு கொடுப்பது என்பதை முடிவு செய்வது தான் சின்னம் ஒதுக்கீடு சட்டத்தின் 15ம் பத்தியில் உள்ளது. அதனடிப்படையில் விசாரணை நடைபெற்றது என்றனர்.

இதேப்போன்று ஓ.பன்னீர் செல்வம் தரப்பில் ஆஜரான அவரது மகன் ரவீந்திரநாத் கூறும்போது, அதிமுக, இரட்டை இலை விவகாரத்தில் ஈ.பி.எஸ்.க்கு எந்த அதிகாரமும் இல்லை. அ.தி.மு.க ஒருங்கிணைப்பாளர் ஓ.பி.எஸ்தான் உண்மையான அ.தி.மு.க ஆவார். எனவே இரட்டை இலை சின்னம் மற்றும் அதிமுக கட்சி ஆகியவற்றை ஓபிஎஸ்.க்கு தான் ஒதுக்க வேண்டும் என்று தெரிவித்தோம் என்று கூறினார்.